


ஸ்பெயின் போன்ற முன்னேறிய தேசங்களில், படித்த மக்கள் தொகை அதிகம். யாருக்கும் அத்தனை எளிதில் அல்வா கொடுத்துவிட முடியாது. எந்த ஊரானாலும் அரசியல்வாதிகளும் போராளிகளும் பேசி ஏமாற்றிவிடக் கூடியவர்கள்தான் என்றாலும், படித்தவர்கள் மத்தியில் இம்மாதிரி ஏமாறுவோர் சதவிகிதம் எப்போதும் குறைவாகத்தான் இருக்கும். இ.டி.ஏ.வின் பெரிய பிரச்னை, மக்கள் ஆதரவு. மிகப்பெரிய இயக்கம்தான் என்றாலும், பாஸ்க் மொழி பேசும் மக்களிடையே மட்டும்தான் அவர்களுக்கு ஓரளவு செல்வாக்கு. மற்ற பிரதேசங்களில் கெட்ட காரியஸ்தர்கள் என்கிற அடையாளம் மட்டுமே.

இதுதான் அவர்களுக்குப் பெரிய தலைவலி. கேட்பது தனி நாடு. விரும்புகிற அடையாளமோ, சுதந்திரப் போராட்ட வீரர்கள் என்பது. ஆனால், என்ன சொல்கிறார்கள்? கிரிமினல்கள். கேப்மாரிகள். மொள்ளமாரிகள். யாருக்குப் பிடிக்கும்?

எனவே, தங்களைக் குறித்து நாட்டு மக்களிடையே நல்ல விதமாக எடுத்துச் சொல்வதற்கு அவர்களுக்கு ஓர் அரசியல் முகம் தேவைப்பட்டது. பாஸ்க் மாகாணத்தில் மட்டுமல்ல, ஒட்டுமொத்த ஸ்பெயினுக்குமான இ.டி.ஏ.வின் இனிய முகம். எழில் கொஞ்சும் குழந்தை முகம். தவிரவும் நவீன உலகில் ஆயுததாரிகளாக மட்டுமே இருந்து இலக்கை அடைந்துவிட முடியாது என்பதும் அவர்களுக்குத் தெரியுமாதலால், கிட்டத்தட்டவாவது தங்கள் கருத்துடன் ஒத்துப்போகக் கூடிய அரசியல் கட்சிகளுடன் நட்புக் கொள்ள மிகவும் விரும்பினார்கள்.

ஆனால், துரதிருஷ்டவசமாக அப்படியொரு கட்சி அவர்களுக்குக் கிடைக்கவில்லை. பல குட்டி இயக்கங்களுடன் பேசிக்கூடப் பார்த்தார்கள். ஃபுல் டைம் அரசியல் பண்ணிக்கொண்டு, பார்ட் டைமாக தீவிரவாதத்தை ஆதரித்தால் போதும் என்றும் இறங்கிவந்தார்கள். ம்ஹூம். ஸ்பெயின் அரசியல்வாதிகளெல்லாம் துண்டைக் காணோம், துணியைக் காணோம் என்று அலறியடித்து ஓடியே போனார்கள்.

வேறு வழியில்லாமல் இ.டி.ஏ. தனக்கென்று ஒரு பினாமி அரசியல் கட்சியை ஆரம்பித்தது. அதன் பெயர் படாசுனா (Batasuna). பாஸ்க் மொழி பேசும் மக்கள் வசிக்கும் பகுதிகளை இணைத்துத் தனி நாடாக்க வேண்டும் என்பதற்காக ஜனநாயக ரீதியில் போராடத் தொடங்கிய இந்தக் கட்சியை, முதலில் ஸ்பெயினில் யாரும் அவ்வளவாகக் கண்டுகொள்ளவில்லை. பின்னணியில் சில ஃப்ரெஞ்சுப் புள்ளிகள் இருக்கிறார்கள், அவர்கள் தூண்டிவிடுகிறார்கள் என்று மட்டும் உளவுத்துறைக்குத் தெரிந்தது.

இதே இ.டி.ஏ.வின் தலைமைப் பரமாத்மாக்கள்தான் பிரான்ஸில் போய் உட்கார்ந்துகொண்டு, வேலை செய்கிறார்கள் என்பது அவர்களுக்குத் தெரியவில்லை அப்போது.

முதலில் மெல்ல மெல்ல மக்கள் பிரச்னை குறித்து எடுத்துப் பேச பொதுக்கூட்டங்கள் போட்டார்கள். துண்டுப் பிரசுரங்கள் விநியோகித்தார்கள். பிறகு, சில சிறு தொழிற்சாலைகளுக்குள் ஊடுருவி, தொழிற்சங்கங்களைக் கைப்பற்றிக் கொண்டார்கள். அப்பாலிக்கா, யாருக்காவது பிறந்தநாள் வந்தால், 138-வது வட்டத்தின் சார்பில் நிதி சேர்த்து நோட்டு மாலை போட்டார்கள். மேடையில் சோடா உடைத்துக் குடித்துவிட்டு, எதிர்க்கட்சிக்காரர்களைத் திட்டினார்கள். அரசாங்கத்தை விமர்சனம் பண்ணினார்கள். எல்லாம் ஜனநாயகம்.

ஆனால், அடிப்படையில் பாஸ்க் தேசியம் என்பது பளிச்சென்று இருந்தபடியால், ஒண்ணும் ஒண்ணும் ரெண்டு என்று கணக்குப் போடுவதில் பெரிய குழப்பம் ஏதுமில்லாமல் போய்விட்டது. 'ங்கொய்யால, இவன் இ.டி.ஏ.காரன்டா' என்று அரசியல்வாதிகள் விழிப்புற்று கட்டம் கட்டத் தொடங்கி விட்டார்கள்.

முதலில் இ.டி.ஏ. இதனைக் கடுமையாக மறுத்தது. பாஸ்க் மாகாணத்துப் பிரச்னையை ஜனநாயக ரீதியில் தீர்க்க விரும்புகிற ஒரு கட்சியை ஒழிக்கச் செய்யும் சதி என்று குற்றம் சாட்டியது. 'அதெல்லாம் புருடா, நம்பாதீர்கள்' என்று உளவுத்துறை பிரகஸ்பதிகள் சொல்லிவிடவே, படாசுனாவை நசுக்கும் பணிகள் ஆரம்பமாயின.

தீவிரவாதிகளின் சாமர்த்தியம் ஒரு மாதிரி என்றால், அரசியல்வாதிகளின் சாமர்த்தியம் இன்னொரு மாதிரி அல்லவா? அவர்கள் தெருத்தெருவாக ஆயுததாரிகளின் பகல் வேஷம் குறித்து உருக்கமான பிரசாரத்தில் ஈடுபடத் தொடங்கினார்கள். ஸ்பெயினின் ஒற்றுமை, இறையாண்மை இன்னபிறவற்றைக் குறித்தெல்லாம் எடுத்துச் சொல்லி, 'படாசுனாவைக் கடாசி எறியுங்கள்' என்று கேட்டுக்கொள்ளத் தொடங்கினார்கள். இன்னும் ஒரு படி மேலே சென்று, ஒரு தீவிரவாத இயக்கம் ஜனநாயக வேஷம் போடுவது தேசத்தின் பாதுகாப்புக்கு ஆபத்து என்று குரல் கொடுக்கவும் ஆரம்பித்தார்கள்.

ஸ்பெயின் அரசு பார்த்தது. இது ஆகிற காரியமில்லை என்று முடிவு செய்தார்கள். ஐரோப்பிய யூனியனுக்கும் அமெரிக்க அரசுக்கும் ஒரு வார்த்தை போட்டுவைத்தார்கள். 'இதோ பாருங்கள், நாங்கள் தடை செய்யப்போகிறோம். அவர்கள் பிரான்ஸின் எல்லைகளில்தான் வளர்ந்து கொண்டிருக்கிறார்கள், இதனால் பிரான்ஸுக்கு ஆபத்து. பிரான்ஸின் நட்பு நாடுகளுக்கும் எப்படியும் ஆபத்து வரத்தான் போகிறது. புத்தி இருந்தால் பிழைத்துக்கொள்ளுங்கள்.'

அவர்களுக்கு என்ன போச்சு? படாசுனாவை ஒரு தீவிரவாத இயக்கம் என்று அமெரிக்கா அறிவித்தது. அமெரிக்கா செய்துவிட்ட பிறகு பிரிட்டன் சும்மா இருக்குமா? சிறந்த ஜெராக்ஸ் மிஷின் அல்லவா அவர்கள்? உடனே, உடனே! சொல்லி வைத்த மாதிரி அடுத்த சில மாதங்களுக்குள் அனைத்து ஐரோப்பிய தேசங்களும் படாசுனாவைத் தடை செய்துவிட்டன. எங்கும் நிதி திரட்ட முடியாது. பொதுக்கூட்டம் போட முடியாது. சோடா குடிக்க முடியாது.

இன்றைக்கு வரை இ.டி.ஏ. தனக்கும் இதற்கும் சம்பந்தமில்லை என்றுதான் சொல்லி வருகிறது. படாசுனாவும் அதே பாட்டைத்தான் பாடிக்கொண்டிருக்கிறது. ஸ்பானிஷ் நீதிமன்றங்கள், உலகளாவிய ஸ்பானிஷ் அமைப்புகள், ஸ்பெயின் மனித உரிமை இயக்கங்கள் யாவும் இந்தப் பாட்டை நிராகரிக்கின்றன. படாசுனா என்றால், படா பேஜார் என்றே அவர்கள் அர்த்தம் சொல்கிறார்கள்.

ஆகஸ்ட் 2002-ல் ஸ்பெயின் நாடாளுமன்றம் ப்ரில்லியண்டாக ஒரு காரியம் செய்தது. அரசியல் கட்சிகள் அனைத்தும் தீவிரவாதத்தைக் கடுமையாக எதிர்க்க வேண்டும் என்று ஓர் உத்தரவு பிறப்பித்தது. பிரிவினைவாதங்கள், தனி நாடு கோரிக்கைகள் எதுவாக இருந்தாலும் அனைத்தும் ஜனநாயக ரீதியில் மட்டுமே எடுத்துச் சொல்லப்பட வேண்டும், ஆயுதம் தூக்குவதும் தவறு, தூக்குபவர்களை சப்போர்ட் செய்வதும் தவறு. இதை அங்கீகரித்துப் பின்பற்றும் கட்சிகளுக்கு மட்டுமே அரசியல் கட்சி அந்தஸ்து என்று சொல்லிவிட்டார்கள். சர்வதேச அளவில் பாராட்டுப்

பெற்ற இந்தச் சட்டத்துக்கு Ley de Partidos Politicos என்று பெயர்.

இந்தச் சட்டம் படாசுனாவை நிலைகுலைய வைத்தது. அவர்களால் வெளிப்படையாக இ.டி.ஏ.வை எதிர்க்க முடியாது. படாசுனா மட்டுமல்ல, பாஸ்க் மாகாணத்து மக்களுக்கே இது தர்மசங்கடம். 'இத்தனை காலமாக ஜனநாயகம் வாழ்ந்து கிழித்தது. நாங்கள் என்ன சுகத்தைக் கண்டோம்' என்று அவர்கள் புலம்பத் தொடங்கினார்கள். புலம்பியவர்கள் பெரும்பான்மையினரா என்பதல்ல முக்கியம். நிறைய புலம்பல்கள் இருந்தன என்பதுதான் முக்கியம். தீவிர மனோபாவம் கொண்டவர்கள், மிதவாதிகள், மிதத் தீவிரர்கள், தீவிர மிதவாதிகள், அப்பாவிகள், படுபாவிகள், ஐயோபாவம் கேஸுகள் என்று அனைத்துத் தரப்பிலும் இ.டி.ஏ.வுக்கு இருந்த ஆதரவு எண்ணிக்கை ஓரளவு வெளிப்படையாகத் தெரிந்த தருணம் என்று அதனைச் சொல்லலாம்.

இ.டி.ஏ. விஷயத்தில் நாங்கள் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால், படாசுனாவைத் தடைசெய்வது மிகவும் தவறு' என்று பலபேர் வாதாடத் தொடங்கினார்கள். இதற்கிடையில், பல்டஸார் கர்ஸான் (Baltasar Garzon) என்கிற நீதிபதி, படாசுனா விவகாரத்தை விசாரித்துக்கொண்டிருந்த பிரகஸ்பதி, 'போற்றுவார் போற்றட்டும், புழுதிவாரித் தூற்றுவார் தூற்றட்டும்', என்று 'படாசுனாவுக்கும் இ.டி.ஏ.வுக்கும் ஜென்ம சாபல்யங்கள் உண்டு, எனவே அதைத் தடை செய்தே தீருவேன்' என்று சொல்லி, கேஸ் கட்டைத் தூக்கிப் போட்டுவிட்டார்.

உடனடியாக படாசுனாவின் அனைத்து அலுவலகங்களும் இழுத்து மூடி சீல் வைக்கப்பட்டன. அவர்கள் மேடையேறிப் பேசவோ, தேர்தலில் நிற்கவோ தடை விதிக்கப்பட்டது. கட்சியின் சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டன. தலைவர்கள் என்று முன்னிறுத்தப்பட்ட பலபேரை காவல்துறை அள்ளிக்கொண்டு போய் கண்காணாத சிறைகளில் உட்கார வைத்தது. ஒரே ரணகளம்.

ஜனநாயக இயக்கம் என்று சொல்லிக் கொண்டிருந்தபடியால், பதிலுக்கு ஒரு துப்பாக்கி தூக்கி குருவி சுடமுடியாமல் போய்விட்டது. ஒருவேளை நாளைக்குத் தடை தளர்த்தப்பட்டாலும் மக்கள் காறித் துப்பிவிடுவார்களே!

மார்ச் 18, 2003-ல் இந்த விஷயம் அரங்கேறியது. ஸ்பெயின் சுப்ரீம் கோர்ட் தீர்ப்பை அடுத்து, மே மாதம் அமெரிக்காவும், ஜூன் மாதம் ஐரோப்பிய யூனியனும் படாசுனாவைத் தடாசுனா ஆக்கின.

என்ன செய்யலாம் என்று யோசித்தார்கள். ஏப்ரல் 2005-ல் பாஸ்க் நாடாளுமன்றத்துக்கு (அங்கு சட்டமன்றத்துக்கும் அதுவே பெயர். தன்னாட்சிப் பிரதேசமல்லவா?) தேர்தல் வரவிருந்தது. அதற்குள் தனக்குச் சாதகமான ஓர் அரசியல் கட்சி அகப்பட்டாலொழிய கதிமோட்சம் இல்லை என்று இ.டி.ஏ. நினைத்தது. யார் வருவார்கள்?

எனவே, திரும்பவும் தானே ஒரு முயற்சி செய்து பார்க்கலாம் என்று முடிவு செய்தார்கள். இம்முறை மிகக் கவனமாகக் களமிறங்கினார்கள். இ.டி.ஏ.வின் எந்தத் தலைவரும் நேரடியாகத் தொடர்புகொள்ளாமல், முற்றிலும் புதுமுகங்களைக் கொண்ட குழு ஒன்றை உருவாக்கி (பெரும்பாலும் ரிடையர் ஆன பள்ளிக்கூட வாத்தியார்கள், கால்நடை மருத்துவர்கள் போன்றவர்களைக் கொண்ட சாதுக்குழு), பாஸ்க் பிரதேசத்துக்கான தனி அடையாளமாக ஒரு கட்சி உருவாகவேண்டிய அவசியத்தை மக்களிடையே எடுத்துச் சொல்ல ஏற்பாடு செய்தார்கள்.

நிறைய செலவு செய்து, படாதபாடு பட்டு அக்கேரா கஸ்டியக் (Aukera Guztiak) என்றொரு கட்சியை உருவாக்கினார்கள். மக்கள் கட்சி. மக்களுக்கான கட்சி. ஜனநாயகக் கொழுந்து. ஆனால், ஒரு காமெடி என்னவென்றால், கட்சி உருவாகி, முதல் கூட்டம் நடத்தப்பட்டபோதே கட்சி முக்கியஸ்தர்கள், எங்கப்பன் குதிரில் இல்லை, இல்லை, இல்லவே இல்லை என்று முழங்கத் தொடங்கினார்கள்.

‘எங்களை ஒருபோதும் தவறான கண்ணோட்டத்தில் பார்க்காதீர்கள்! நாங்கள் பரிபூரண ஜனநாயகவாதிகள். எங்களுக்கும் இ.டி.ஏ.வுக்கும் தொடர்பில்லை. இ.டி.ஏ.வா? யாரது? ஈட்டி எறியும் வீரர்களா? எங்களுக்குத் தெரியாது. நாங்கள் தீவிரவாதத்தை ஒருபோதும் ஆதரிக்கமாட்டோம். பாஸ்க் மக்களின் விடுதலைக் கனவை ஜனநாயக ரீதியில் கோரிப்பெறுவோம். ஆமென்.’

‘அடடே வாங்கய்யா’ என்று உளவுத்துறையினர் அந்தக் கட்சியில் சேரும் அத்தனை பேரின் ஜாதகத்தையும் தேடத் தொடங்கினார்கள். எங்கே சுக்கிரன் உச்சம், ராகு எங்கே, கேது எங்கே என்று பார்த்து, சனி இங்கே என்று பிடித்துக்கொண்டு போகத் தொடங்கினார்கள்.

தலையில் அடித்துக்கொண்டது இ.டி.ஏ. மேலிடம். இதென்ன அபத்தம்? ஜனநாயகம் இத்தனை பேஜாரா? துப்பாக்கி கலாசாரம் மிகவும் ஈசியாக இருக்கிறதே? நமக்கெதுக்கு இந்த பஃபூன் வேஷம்?

அவர்கள் யோசித்துக்கொண்டிருந்தபோதே ஸ்பானிஷ் உச்சநீதிமன்றம், தன் பிரத்தியேக செல்வாக்குகளைப் பயன்படுத்தி, இந்தப் புதிய கழகத்துக்கும் சே, கட்சிக்கும் பழைய படாசுனா பிரகஸ்பதிகளுக்கும் இடையே உள்ள ஆறு ஒற்றுமைகளைக் கண்டுபிடித்து, இதையும் தடை செய்துவிட்டார்கள்.

தேர்தல் நெருங்கிவிட்டது. இதற்குமேல் என்ன செய்ய முடியும்? இரண்டு முயற்சிகள். இரண்டுமே நிறைய செலவு சாப்பிட்ட முயற்சிகள். நவீன உலகில் மிகப்பெரிய ஆடம்பரமே ஜனநாயகம்தான். எத்தனை கஷ்டங்கள். நீதிமன்றம், நாடாளுமன்றம், அந்த மன்றம், இந்த மன்றம் என்று எத்தனை அலைச்சல்கள்!

ஆனால், தேர்தல் வாய்ப்பை விட்டுவிட்டால் நாலஞ்சு சீட் கிடைப்பதும் கிடைக்காமல் போய்விடுமே? என்ன செய்யலாம்? ஏதாவது செய்தாக வேண்டும். செய்தே தீரவேண்டும். இல்லாவிட்டால், பாஸ் புக்தான் ஒல்லியாகுமே தவிர, பாஸ்க் புஸ்ஸாகிவிடும்.

சரியாக தேர்தலுக்குப் பதினைந்தே நாட்கள் இருந்தபோது, குண்டு தைரியத்தில் அவர்கள் ஒரு முடிவெடுத்தார்கள்.